# <u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி</u>

**அசல் வழக்கு எண் 171/2015**

பெயர்:**கமலா** நாள்: 21.08.2025

பி.வா.சா.1 – வாதி தரப்பு குறுக்கு விசாரணை.

பி.வா.சா.1 – கமலா - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி தொடக்க நேரம் 11:50</u>

தாவா சொத்தானது சின்னகுமரநாடார் உடையதா என்றால், சரிதான். சின்னகுமரநாடாருக்கு மொத்தம் நான்கு வாரிசுகளா என்றால், ஆமாம் அதில் என் அப்பா, முதல் பிரதிவாதி நல்லியன், 5 மற்றும் 6 பிரதிவாதிகளின் தாயார் பாப்பாத்தி மற்றும் வாதி காளியம்மாள் ஆவார். சின்னகுமரநாடாரின் வாரிசுகளுக்கு எந்தவிதமான பதிவு செய்யப்பட்ட பாக பிரிவினைப் பத்திரம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால், சரிதான். என்னுடைய எதிர்வாதத்தில் தை மாதம் 1967 ஆம் வருடம் என் அப்பா பழனியப்பன் மற்றும் முதல் பிரதிவாதி நல்லியன் ஆகியோர்களுக்கு மட்டும் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்து கொண்டதாக நான் கூறியிருக்கிறேன் என்றால், சரிதான். 1967 ஆம் ஆண்டு நான் பிறந்திருந்தேனா என்றால், நான் பிறக்கவில்லை என்னுடைய தகப்பனார் சொன்னார். வாய்மொழியாக 1967 ஆம் ஆண்டு பாகம் பிரிந்துள்ளதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. என்னுடைய எதிர்வாதத்தில் வாதி காளியம்மாள் காட்டை ஓட்டாததால் அவருடைய உரிமையை இழந்துவிட்டதாக கூறியிருக்கிறேன் என்றால், சரிதான். வாதி கூட்டு சுவாதீனத்தில் இன்று வரை இருந்து வருகிறார் என்றால், சரியல்ல. தாவா சொத்தில் கூட்டு உரிமையாளராக இருக்கும் வாதியை கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்று நான் சொல்கிறேன் என்றால், சரியல்ல. என்னுடைய தகப்பனாருக்கும் முதல் பிரதிவாதிக்கும் 1967 ஆம் ஆண்டு ஏற்பட்ட வாய்மொழி பாகப்பிரிவினையில் எனது தகப்பனாருக்கும் முதல்

பிரதிவாதிக்கும் தனித்தனியாக சொத்துக்கள் ஒதுக்கப்பட்டு அதனை நாங்கள் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருவதாக சொன்னால், சரியல்ல. இந்த வழக்கானது காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக நான் சொல்வது, சரியல்ல. என்னுடைய தாத்தா சின்னகுமரநாடார் காலமானதற்கு பின்னிட்டு வாதி தொடர்ந்து தாவா சொத்தில் கூட்டு சுவாதீன அனுபவத்தில் இருந்து வருவதால் காலவரம்பு சட்டம் என்பதே இவ்வழக்கிற்கு பொருந்தாது என்றால், சரியல்ல. வாதியின் திருமணத்தின்போது சீர்வரிசை செய்ததால் சொத்தில் பங்கில்லை என்று சொல்வது தவறு என்று சொன்னால், சரியல்ல. நான் சொல்வதுபோல் திருமணத்தின்போது எந்த சீர்வரிசையும் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. பட்டாவில் பெயருள்ளதால் மட்டும் வாதிக்கு சொத்தில் பங்கில்லை என்று சொல்வது தவறு என்றால், சரியல்ல. வாதி கோபிசெட்டிபாளையத்தில் உள்ளதால் வாதிக்கு தெரியாமல் எனது தகப்பனார் மற்றும் முதலாம் பிரதிவாதி பட்டாவில் அவர்களுடைய பெயர் சேர்த்து கொண்டதால் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. முதலாம் பிரதிவாதி 31.10.2001 ல் செய்த கிரயம் வாதியையும் வாதியின் சொத்துரிமையையும் கட்டுப்படுத்தாது என்றால்,சரியல்ல. 2 முதல் 4 பிரதிவாதிகள் 28.08.2007 தேதி அன்று 8-ஆம் பிரதிவாதி பெருமாள் பெயரில் ஏற்படுத்திய கிரயம் வாதியையும் வாதியின் சொத்துரிமையையும் கட்டுப்படுத்தாது என்றால், சரியல்ல. சின்னகுமரநாடார் வாரிசுகளில் வாதியும் ஒரு வாரிசு என்பதால் தாவா சொத்தில் நான்கில் ஒரு பங்கு வாதிக்கு உண்டு என்றால், சரியல்ல. ஆகையால் தாவா சொத்தை நான்கு சரிபாகங்களாகப் பிரித்து அதில் ஒரு பாகத்தை வாதிக்கு ஒதுக்கவேண்டும் என்று சொன்னால், சரியல்ல. ஆகையால் தாவா சொத்தை சரி பாகமாக பிரித்து வாதிக்கு ஒரு பாகத்தை கொடுக்கும் வரை பிரதிவாதிகள் 1 முதல் 4 மற்றும் 7,8 பிரதிவாதிகளும் தாவா சொத்தை வில்லங்கம்

செய்யக்கூடாது என்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பட்டாவில் வாதியின் பெயர் இல்லாததால் அது வாதியைக் கட்டுப்படுத்தாது என்று சொன்னால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.5 ல் நாங்கள் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்தியுள்ள தொகையானது தாவா சொத்தில் எங்களுடைய தனிப்பட்ட உரிமையை காட்டாது என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.6 ன்படி முதலாம் பிரதிவாதி தேவூர் காவல்நிலையத்தில் எங்கள் மீது கொடுத்த புகாரானது வாதிக்கு சம்பந்தமில்லாதது என்று சொன்னால், சரியல்ல. முதலாம் பிரதிவாதியின் மகனை வாதியின் மகளுக்கு திருமணம் செய்துகொடுத்த காரணத்தினால் முதலாம் பிரதிவாதியின் தூண்டுதலின் பெயரில் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால், சரியல்ல. தாவாவின் பரிகாரம்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால், சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை முடிந்த நேரம் 12:15</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என்முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

ELAMATHI R

Digitally signed by ELAMATHI R
Date: 2025.08.21 17:30:26 +1000

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.